**IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE, TIRUVANNAMALAI.**

**O.S. No. 183 /2021 PW1**

08.08.2024 **வா.சா.1 திரு. காயத்திரி சத்திய வாக்குமூலத்தின் பேரில் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி -**

என்னுடைய நிருபண வாக்குமூலத்தில் 4ம் பக்கத்தில் 7ம் பத்தியில் என்னுடைய பெற்றோர் கொடுத்த பணம் மற்றும் என்னுடைய சேமிப்பு ஆகியவற்றை வைத்து வாங்கி வைத்திருந்த வீட்டை கடந்த செப்டம்பர் 2020ம் ஆண்டு விற்பனை செய்து சேமித்து வைத்திருந்தேன் என்று நான் சொல்லியிருப்பது சரிதான். பிரதிவாதி என்னிடம் வியாபாரத்தில் எவ்வளவு தொகை முதலீடு செய்யச்சொல்லி கேட்டார் என்றால் பணம் ஏதும் குறிப்பிட்டு அவர் சொல்லவில்லை. நானும் எவ்வளவு தொகை என குறிப்பிட்டு கேட்கவில்லை. எனக்கு முதலீடு செய்ய விருப்பம் இல்லாததற்கு என்ன காரணம் என்று கேட்டால் குறிப்பிட்டு காரணம் ஏதும் இல்லை. அந்த சமயத்தில் முதலீடு செய்வதற்கு என்னிடம் போதிய பணம் இல்லாததால் தான் நான் விருப்பம் இல்லை என்று சொன்னேன் என்றால் சரியல்ல. எனது தாயாரின் வருமானத்திற்கான ஆதாரமாக ஆவணமோ, அவரது வங்கி கணக்ககோ தாக்கல் செய்தேனா என்றால் இல்லை. நான் எனது பியூட்டி பார்லர் மூலமாக வருமாணம் வருவதை காட்டுவதற்கு ஆவணமோ, எனது வங்கி கணக்கோ இதுவரை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என்னுடைய கணவர் அரசு ஊழியர் என்றால் சரிதான். எனது கணவர் அரசு ஊழியர் என்பதால் ஆண்டுதோரும் அவருடைய மற்றும் அவருடைய மனைவியுடைய அசையும் மற்றும் அசையா சொத்துக்களின் விவரப் பட்டியலை அரசிடம் தாக்கல் செய்யவேண்டும் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அவ்வாறு எனது கணவர் தாக்கல் செய்துள்ளாரா என்றால் எனக்கு அது பற்றி தெரியவில்லை. எனது கணவர் அரசு ஊழியர் என்பதாலும், நான் அவரது மனைவி என்பதாலும், அரசு அனுமதியின்று வட்டிக்கு கடன் யாருக்கும் கொடுக்கக்கூடாது என்றால் நான் வட்டிக்கு கடன் கொடுக்கவில்லை. என்னிடம் உண்மையாலுமே ரூ. 50 லட்சம் இருந்திருக்கும் பட்சத்தில் அது குறித்து அரசுக்கு நான்

விவரங்கள் சமர்ப்பித்திருப்பேன் என்று சொன்னால் சரியல்ல. உண்மையாலுமே கடன் கொடுத்திருக்கும் பட்சத்தில் அதற்கான அரசு அனுமதியை நான் பெற்று இருப்பேன் என்றும், அவ்வாறு எந்த ஒரு கடனும் நான் கொடுக்காததால் தான் அரசு அனுமதியை நான் பெறவில்லை என்றால் சரியல்ல. வருமான வரிச் சட்டப்படி ரூ. 50 லட்சம் ரொக்கமாக கடன் கொடுப்பது சட்டப்படி குற்றம் என்றால் சரியல்ல. 6.1.2021 ந் தேதி மகேஸ்வரி என்னை எவ்வாறு தொடர்பு கொண்டார் என்று கேட்டால் போன் மூலமாக 6.1.2021ந் தேதிக்கு முன்பாக தொடர்பு கொண்டார். எந்த தேதி என்று குறிப்பாக நியாபகம் இல்லை. எந்த நேரம் என்று குறிப்பிட்டு சொல்ல இயலாது. அவர் எந்த மொபைல் எண்ணில் இருந்து என்னை தொடர்பு கொண்டார் என்றால் நியாபகம் இல்லை. போன் செய்து என்னிடம் பணம் வேண்டும் என கேட்டார். 6.1.2021க்கு முன்பாக நான் பிரதிவாதியை தொடர்பு கொண்டேனா என்றால் இல்லை. மகேஸ்வரி எனக்கு போன் செய்து என்னிடம் பணம் கேட்ட பிறகு நான் அவருக்கு போன் செய்தேனா என்றால் இல்லை. பணம் கேட்டு எனக்கு போன் செய்த பிறகு மீண்டும் எனக்கு அவர் எப்போது போன் செய்தார் என்றால் எனக்கு தேதி நியாபகம் இல்லை. இந்த வழக்கிற்கு முன்பாக கடைசியாக மகேஸ்வரியை நான் எப்போது சந்தித்தேன் என்று கேட்டால் 6.1.2021 அன்று தான் சந்தித்தேன் அதன் பிறகு சந்திக்கவில்லை. சுமதியை எனக்கு சுமார் 4 ஆண்டுகளாக தெரியும். சுமதி செஞ்சியில் உள்ள ஒரு தனியார் பள்ளியில் முதல்வராக பணிபுரிகின்றார். அந்த பள்ளியில் அவர் எத்தனை ஆண்டுகளாக வேலை செய்கிறார் என்று கேட்டால் எனக்கு தெரியாது. எனக்கு தெரிந்த 4 ஆண்டுகளில் சுமதி அந்த பள்ளியில் முதல்வராக பணிபுரிகின்றாரா என்று கேட்டால் எனக்கு தெரியவில்லை. சுமதி வீடும் எனது வீடும் பக்கம் பக்கமாக உள்ளதா என்றால் இல்லை. 6.1.2021 அன்று எனது வீட்டிற்கு மகேஸ்வரி எத்தனை மணிக்கு வந்தார் என்று கேட்டால் காலை சுமார் 9 முதல் 9.30 மணி இருக்கும். மகேஸ்வரியுடன் சுமதி, ரவி ஆகியோரும் வந்தார்கள். அவர்கள் வந்த போது எனது வீட்டில் யார் யாரெல்லாம் இருந்தார்கள் என்று கேட்டால் நான் மட்டும் தான் இருந்தேன். எத்தனை மணிக்கு எனது வீட்டை விட்டு அவர்கள்

கிளம்பி போனார்கள் என்று கேட்டால் சுமார் 1/2 மணி நேரம் இருந்து சென்றார்கள். மகேஸ்வரியுடன் வந்த நபர்களும் அதே நேரத்தில் சென்றார்கள். சுமதியை முதன் முதலில் நான் திருவண்ணாமலை கிரிவலப் பாதையில் உள்ள பாபா கோயிலில் வைத்து சந்தித்தேன். மகேஸ்வரி, ரவி, சுமதி ஆகியோர் எந்த வாகனத்தில் வந்தார்கள் என்று எனக்கு தெரியவில்லை ஆனால் போகும்போது காரில் சென்றார்கள். அவர்கள் வந்த கார் யாருடையது என்று எனக்கு தெரியவில்லை. அந்த காரின் பதிவு எண் தெரியாது. எந்த கம்பெனியை சேர்ந்த கார் என்று எனக்கு தெரியாது. எந்த கலர் கார் என்று தெரியுமா என்று கேட்டால் சிமெண்ட் கலர் போல நியாபகம் இருக்கிறது. எனது வீட்டிற்கு வெளியே நான் வந்து பார்த்தபோது கார் ஏற்கனவே நின்றிருந்ததா அல்லது நான் வெளியே வந்த பிறகு கார் வந்ததா என்று கேட்டால் நியாபகம் இல்லை. மகேஸ்வரி என்னுடன் வீட்டில் இருந்த போது யாருக்கேனும் போன் செய்தார்களா என்று கேட்டால் யாருக்கும் போன் செய்யவில்லை. நான் ரூ. 50 லட்சம் பணம் வைத்திருந்தது எனது கணவருக்கு தெரியுமா என்று கேட்டால் தெரியும். எப்போது அவருக்கு தெரியும் என்று கேட்டால் வீடு விற்று என் கைக்கு பணம் வந்ததில் இருந்து தெரியும். மகேஸ்வரிக்கு கடன் கொடுக்க இருப்பது குறித்து எனது கணவருக்கு தெரிவித்தேனா என்றால் இல்லை. மிகப் பெரிய தொகையை ஒரு மூன்றாம் நபருக்கு கடன் கொடுக்கும் போது அது குறித்து எனது கணவருக்கு தெரிவிக்காமல் இருப்பது நம்பும்படியாக இல்லை என்றால் சரியல்ல. 6.1.2021க்கு பிறகு கடன் கொடுத்த விவரத்தை எனது கணவருக்கு சென்னேனா என்றால் சொன்னேன். அதற்கு அவர் ஆட்சேபணை ஏதும் தெரிவித்தாரா என்று கேட்டால் ஏன் சொல்லாமல் கொடுத்தாய் என்று கேட்டார். என் சகோதரர் புகழுக்கு மேற்படி கடன் விவரம் தெரியுமா என்று கேட்டால், கடன் கொடுத்த பிறகு தெரியும். எனது கணவர் அரசு ஊழியர் என்ற முறையில் ரூ. 50 லட்சம் ரொக்கமாக நான் கடன் கொடுத்த விவரம் அவருக்கு தெரியும் என்றால் சரிதான். எனது கணவரையும், சகோதரர் புகழையும் அழைத்து விசாரித்தால் நான் கடன் கொடுத்த விஷயம் தெரியும் என்றால், நான் கடன் கொடுத்த தேதிக்கு பிறகு அவர்களுக்கு தெரியும். கடன் கொடுத்த விவரத்தை நான்

அவர்களுக்கு சொன்னது குறித்து அவர்களுக்கு தெரியும் என்றால் சரிதான். நான் எனது கணவரிடமும், புகழிடமும் கடன் விவரத்தை சொன்ன பிறகு எனது கணவரோ, புகழோ பிரதிவாதியை எப்போவாவது அழைத்து விவாரித்தார்களா என்றால் இல்லை. என்னிடம் கடன் வாங்க வந்த தேதி அன்று என் வீட்டிற்கு வருவதற்கு முன்பு சுமதி எனக்கு போன் செய்து வருவது குறித்து சொன்னாரா என்றால் இல்லை. புரோ நோட்டு எங்கு வாங்கப்பட்டது என்றால் அதை நான் வாங்கவில்லை. புரோ நோட்டின் படி கடன் கொடுத்த போது Surity யாக இருக்கச் சொல்லி தனியாக ஆவணம் ஏதும் எழுதி கேட்டேனா என்றால் இல்லை. வழக்கு கடன் உண்மையாக வாங்கியிருக்கும் பட்சத்தில் நான் கண்டிப்பாக மேற்படி கடனுக்கு ஆதரவாக ஏதேனும் சொத்து பத்திரமோ அல்ல surity கையொப்பமோ பிரதிவாதியிடம் பெற்றிருப்பேன் என்றால் சரியல்ல. கடன் கொடுத்தது பொய் என்பதால் தான் நான் சொத்து பத்திரமோ, surity கையொப்பமோ பெறவில்லை என்றால் சரியல்ல. என்னிடம் ரூ. 50 லட்சம் பணம் இருந்ததை சுமதி பார்த்தாரா என்றால் நான் கொடுக்கும் போது பார்த்தார். பிறகு மகேஸ்வரி வாங்கி என்ன செய்தார் என்று கேட்டால் அவரது பேக்கில் வைத்துக் கொண்டார். நான் அந்த பணத்தை எனது பேக்கில் வைத்திருந்தேன். நான் பணத்தை கொடுத்த உடன் மகேஸ்வரி என்னுடைய பேக்கிலேயே வைத்து எடுத்து சென்றார். பணத்தை வாங்கிய உடனே சென்று விட்டார்களா என்றால் சுமார் 5 - 10 நிமிடம் கழித்து சென்று விட்டார்கள். என்னுடைய நிருபண வாக்குமூலத்தில் 4ம் பக்கத்தில் 7ம் பத்தியில் வா.சா.ஆ.2, வா.சா.ஆ.3, வா.சா.ஆ.4 ஆகியவற்றைப்பற்றி குறிப்பிட்டுள்ளேன். மேற்கண்ட ஆவணங்களின்படி வா.சா.ஆ.2 ஆவணம் மூலம் 2017ல் வங்கி மூலம் ரூ- 11 லட்சம் கடனாக பெற்றதாகவும், வா.சா.ஆ.3ன் படி 2020ல் மேற்படி வங்கிக் கடனான ரூ. 11 லட்சத்தை வட்டியுடன் பைசல் செய்துள்ளதாகவும் தெரிவித்துள்ளேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.4 மூலம் 2020ல் கிரைய தொகையாக ரூ. 2,14,000/- பெற்றுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் 2,14,000/- விட கூடுதலாக பணத்தை பெற்றேன். அதேபோல் வங்கி பரிவர்த்தனை மூலம் ரூ. 2,14,000/- பெற்றிருப்பதாக

ஆவணத்தில் கண்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் நான் வங்கி பரிவர்த்தனையில் பெறவில்லை, ரொக்கமாக பெற்றேன். வா.சா.ஆ.4 ஆவணமாக தாக்கல் செய்யப்பட்டிருக்கும் கிரையப் பத்திரப்படி ரூ. 2, 14,000/- கிரையத் தொகை பெற்றிருப்பதாக குறிப்பிட்டு இருக்கும் பட்சத்தில் அதை விட அதிகமாக பணம் பெற்றதாக சொல்வது தாவா கடனுக்கு என்னிடம் போதிய பணம் இருந்ததாக காண்பிப்பதற்காக பொய்யாக நான் சொல்லும் விவரம் என்றால் சரியல்ல. சட்டத்திற்கு புறம்பாக பெறப்படும் எந்த ஒரு தொகையும் ஏற்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. ரூ. 2,14,000/- தொகையை எனது வங்கி கணக்கில் நான் பெறவில்லை என்றும், ரொக்கமாக தான் பெற்றேன் என்றும் சொல்வது குறித்து எனது வங்கி கணக்கின் விவரத்தை பார்த்தால் உண்மை தன்மை தெரியவரும் என்றால் சரிதான். எனது வங்கிக் கணக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தயாரா என்றால் தேவை ஏற்படும் பட்சத்தில் தாக்கல் செய்ய தயாராக உள்ளேன். எனக்கு ஒரே ஒரு வங்கி கணக்கு தான் உள்ளது. எனக்கு கீழ்நாச்சிப்பட்டு கனரா வங்கி கிளையில் கணக்கு உள்ளது. ரவியை எனக்கு சுமார் 30 வருடமாக தெரியும். ரவி எனக்கு சித்தப்பா ஆவார். ரவி தற்போது எந்த பகுதியில் குடியிருக்கிறார் என்று எனக்கு தெரியவில்லை. எனக்கு ரவி சித்தப்பாவாக இருக்கும் பட்சத்தில் அவர் எங்கு இருக்கிறார் என தெரியாது என்று பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. புரோ நோட்டில் சாட்சியாக ரவியை வரச்சொல்லி மகேஸ்வரி தான் சொன்னார். மகேஸ்வரிக்கு ரவி குடும்ப நண்பர் ஆவார். ரவியை இந்த வழக்கில் நான் ஏன் சாட்சியாக அழைக்கவில்லை என்றால், ரவிக்கு உடல்நிலை சரியில்லை என்று கூறியதால் சாட்சியாக அழைக்கவில்லை. தற்போது அவர் சாட்சியாக அழைக்க வாய்ப்பு உண்டா என்றால் இல்லை. ரவியை எனது தரப்பில் சாட்சியாக விசாரித்தால் வழக்கு கடன் பொய் என தெரிந்துவிடும் என கருதி அவரை நான் விசாரிக்க வேண்டுமென்றே மறுக்கிறேன் என்றால் சரியல்ல. பிரதிவாதியின் மீது போடப்பட்டுள்ள வழக்குகள் குறித்து எனக்கு எப்படி தெரியவந்தது என்று கேட்டால் நீதிமன்றத்திற்கு நான் வருவது மூலம் தெரிந்து கொண்டேன். மகேஸ்வரிக்கு எதிராக உள்ள மற்ற வழக்குகள் அனைத்து வேறு நபர்கள்

மகேஸ்வரி போட்ட வழக்குகள் ஆகும். வேறு நபர்கள் மகேஸ்வரி மீது போட்ட வழக்கு விவரங்களை தெரிவித்த நான் எனது சகோதரர் புகழ் மகேஸ்வரி மீது போட்ட வழக்கை வேண்டுமென்றே சொல்லாமல் மறைத்து உள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கு கடனை தவிர வேறு எந்த கடனும் மகேஸ்வரிக்கு நான் கொடுக்கவில்லை. மகேஸ்வரியிடம் இருந்தும் நான் எந்த ஒரு கடனும் பெற்றதில்லை. தாவா புரோ நோட்டை எனது சகோதரர் புகழ் என்னிடம் கொடுத்து இந்த வழக்கை தாக்கல் செய்து விவரம் தெரிந்து விடும் என்பதால் தான் எனது சகோதரர் புகழ் மகேஸ்வரி மீது போட்ட வழக்கை நான் மறைத்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் எனது வழக்குரையில் சொல்லப்பட்டு மகேஸ்வரி மீதான வழக்குகள் அனைத்தும் மகேஸ்வரியின் கணவர் இறந்ததற்கு பின்னிட்டு மகேஸ்வரியின் மீது போடப்பட்ட வழக்குகள் என்றால் அது பற்றி எனக்கு தெரியவில்லை. மகேஸ்வரி மீது போடப்பட்டுள்ள மற்ற வழக்கு விவரங்கள் குறித்து எனக்கு எப்படி கிடைத்து என்றால் எனது வழக்கறிஞர் மூலமாக கிடைத்தது. எனது வழக்கையும், புகழ், மகேஸ்வரி மீது போட்ட வழக்கையும் நடத்தும் வழக்கறிஞர் ஒரே வழக்கறிஞர் என்றால் எனக்கு தெரியவில்லை. தற்போது எனது குடியிருக்கும் வீட்டை கட்டத்தான் வங்கியில் இருந்து கடன் வாங்கியுள்ளேன் என்றால் இல்லை. ஏற்கனவே நான் வங்கியில் கடன் வாங்கியிருந்ததாலும், அதை வட்டியுடன் திரும்ப செலுத்த பணம் போதாத காரணத்தால் பல்வேறு கடன்களை வாங்கி வங்கி கடனை பைசல் செய்த வகையில் நான் கடனாளியாக இருந்துள்ளேன் என்றால் சரியல்ல. எனது கணவரும், வங்கியில் கடன் பெற்றிருந்தார் என்றும், அதனால் அவரும் கடனாளியாக இருந்தார் என்றால் சரியல்ல. எனது அண்ணனும், கார் லோன் வாங்கிய வகையில் கடனாளியாக இருந்தார் என்றால் எனக்கு தெரியாது. ஆகவே நான் ஏற்கனவே போதிய சேமிப்பு இல்லாமல் கடன் வாங்கியிருந்த நிலையில் என்னிடம் ரூ. 50 லட்சம் ரொக்கம் இருந்ததாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. அவ்வாறு ரூ. 50 லட்சம் என்னிடம் ரொக்கமாக இருந்திருக்கும் பட்சத்தில் நான் வங்கியில் கடன் வாங்கியிருக்க அவசியமே ஏற்பட்டு இருக்காது என்றால் சரியல்ல. எனது சகோதரர் புகழுக்கும்,

மகேஸ்வரியின் கணவருக்கும் பணம் கொடுக்கல் வாங்கல் இருந்தது என்றும், மகேஸ்வரியை மிரட்டி சொத்தை பறிக்க வேண்டும் என்ற நோக்கில் எனது சகோதரர் புகழின் தூண்டுதலின் பேரில் இந்த வழக்கை நான் மகேஸ்வரிக்கு எதிராக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனக்கும் மகேஸ்வரிக்கும் எந்த ஒரு காலத்திலும், எந்த ஒரு கடன் பரிவர்த்தனையும் இருந்ததில்லை என்றால் சரியல்ல. ரூ. 50 லட்சம் கடன் கொடுக்கும் அளவிற்கு என்னிடம் போதிய வருவாய் இருந்தததில்லை என்றால் சரியல்ல. ரூ. 50 லட்சம் என்னிடம் ரொக்கம் இருந்ததை காண்பிக்க ஆவணம் ஏதும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் வட்டிக்காக கடன் கொடுக்கவில்லை என்று ஒப்புக்கொண்டுள்ளதால் நான் புரோ நோட்டின் அடிப்படையில் பிரதிவாதிக்கு கடன் கொடுத்திருக்க வாய்ப்பே இல்லை என்றால் சரியல்ல. உண்மையாலுமே கடன் கொடுத்திருந்தால் கடன் வசூலிக்க வழக்கு தாக்கல் செய்திருப்பதாக சொல்லியிருப்பேன் என்றும், சொத்தை ஜப்தி செய்ய வழக்கு தாக்கல் செய்திருப்பதாக சொல்லியிருக்க மாட்டேன் என்று சொன்னால் சரியல்ல. வழக்கு புரோ நோட் படி எந்த ஒரு பரிவர்த்தனையும் நடக்கவில்லை என்றால் சரியல்ல. புரோ நோட்டில் கண்டபடி எந்த ஒரு கடன் தொகையையும் பிரதிவாதி பெறவில்லை என்றும், வழக்கு புரோ நோட்டு போலியாக வழக்கிற்காக தயார் செய்யப்பட்ட ஆவணம் என்றும், ஆகவே சட்டப்படி செல்லாத புரோ நோட் அடிப்படையில் தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த வழக்கும் நிலைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. இந்த வழக்கின் ஆவணங்கள் அனைத்தும் பொய்யானவை என்றால் சரியல்ல. இந்த வழக்கில் நான் கொடுத்த கடனை போதிய ஆதாரங்களுடன் நிருப்பிக்காத காரணத்தால் வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல. பொய்யான ஆவணங்களின் அடிப்படையில் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருப்பதால் பிரதிவாதி என் மீது சட்ட நடவடிக்கை எடுக்க உள்ளார் என்றால் சரியல்ல.

/உண்மை நகல்/

ஒப்பம்/- திரு. ப. மதுசூதனன்,
முதன்மை மாவட்ட நீதிபதி,
திருவண்ணாமலை.

**IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE, TIRUVANNAMALAI.**

**O.S. No. 183 /2021 PW2**

08.08.2024 **வா.சா.2 திரு. சுமதி சத்திய வாக்குமூலத்தின் பேரில் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை -**

இந்த வழக்கில் நான் யாருக்காக சாட்சி சொல்ல வந்துள்ளேன் என்றால் யாருக்காகவும் வரவில்லை இந்த வழக்கில் சாட்சி சொல்ல அழைத்ததால் வந்தேன். இந்த வழக்கில் சாட்சியம் அளிக்க என்னை காயத்திரி தான் அழைத்தார். வழக்கு கடன் பெறும் சமயத்தில் நான் உடன் இருந்ததால் அது குறித்து விவரங்கள் சொல்வதற்கு என்னை வருமாறு காயத்திரி அழைத்தார். எனக்கு காயத்திரியை சுமார் 4 ஆண்டுகளாக தெரியும். எந்த ஆண்டில் இருந்து தெரியும் என்று கேட்டால் சுமார் 2020ம் ஆண்டில் இருந்து தெரியும். 6.1.2021ல் கடன் கொடுக்கப்பட்டது. காயத்திரி வீட்டிற்கு செல்லும் போது காலை சுமார் 9 முதல் 9.30 மணி இருக்கும். காயத்திரி வீட்டிற்கு முதலில் யார் சென்றது என குறிப்பிட்டு சொல்ல இயலாது. நாங்கள் 3 பேரும் ஒன்றாக சென்றோம். நாங்கள் வருவது குறித்து காயத்திரிக்கு முன்னமே நான் போன் செய்து சொன்னேனா என்றால் இல்லை. காயத்திரி வீட்டை விட்டு நாங்கள் செல்லும் போது சுமார் காலை 11.30 முதல் 12 மணி இருக்கும். வழக்கு கடன் சமயத்தில் நான் வேலைக்கு எதுவும் செல்லவில்லை. தற்போது நான் கீழ்பென்னாத்தூர் தனியார் பள்ளியில் பிரின்ஸ்பாலாக வேலை செய்கிறேன். சுமார் 2 ஆண்டுகளாக பணிபுரிகின்றேன். ரவியை எனக்கு எப்படி தெரியும் என்றால் எனக்கு ரவியை தெரியாது. ரவி காயத்திரியின் சித்தப்பா என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. காயத்திரி ரவியை சாட்சியாக அழைத்தாரா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. ரவியை அன்றைய தினம் எங்கு சந்தித்தேன் என்றால் ரவி மகேஸ்வரியுடன் வரும் வழியில் சந்தித்தேன். ரவியும், மகேஸ்வரியும் காரில் வந்தார்கள். அந்த கார் யாருடையது என்று எனக்கு தெரியாது. எங்களை இறக்கிவிட்ட உடன் கார் அங்கிருந்து சென்று விட்டதா என்றால் இல்லை. காயத்திரி பணத்தை பேகில் வைத்து மகேஸ்வரியிடம் கொடுத்து சுமார் 5 - 10 நிமிடத்தில்

மகேஸ்வரியும் நாங்களும் சென்று விட்டோம் என்று காயத்திரி சொல்லியிருந்தால் சரியல்ல சிறிது நேரம் ஆனது. என்னிடம் காட்டப்படும் என்னுடைய நிருபண வாக்குமூலத்தில் கண்டுள்ள கையொப்பம் என்னுடையது தான். என்னிடம் காட்டப்படும் நிருபண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான் அதில் அட்டஸ்டேஷன் போட்டுள்ள கையெழுத்து யாருடையது என்றால் எனக்கு நியாபகம் இல்லை. நிருபண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் நான் எப்போது போட்டேன் என்று கேட்டால் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யும் போது போட்டதாக நியாபகம். என்னிடம் காட்டப்படும் வழக்கு புரோநோட்டில் 2ம் சாட்சி கையொப்பம் என்னுடையது தான். புரோ நோட்டில் என்னுடைய கையொப்பத்திற்கு கீழே என்னுடைய பெயர் ஏதும் கண்டுள்ளதா என்றால் இல்லை. ரவியின் சாட்சி கையொப்பத்திற்கு கீழ் ரவி என்ற பெயரை நான் தான் எழுதினேன். என்னிடம் காட்டப்படும் எனது நிருபண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பமும், நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு முதல் விசாரணை சாட்சியத்தில் உள்ள கையொப்பமும் வேறுபாடு உள்ளது என்றால் சரியல்ல. வழக்கு புரோ நோட்டில் உள்ள எனது சாட்சி கையொப்பத்திற்கும், நிருபண வாக்குமூலத்தில் உள்ள எனது கையொப்பத்திற்கும் இடையே வேறுபாடு உள்ளது என்றால் சரியல்ல. கையெழுத்து வல்லுநருக்கு அனுப்பி ஆய்வு செய்தால் மேற்படி ஆவணங்களில் உள்ள கையெழுத்து வேறுபாடுகள் தெரியவரும் என்றால் சரியல்ல. மகேஸ்வரியின் கணவர் எனக்கு தெரியாது. மகேஸ்வரியை எனக்கு கோயிலில் வைத்து பழக்கம். நானும், காயத்திரியும், மகேஸ்வரியும் ஒன்றாக கோயிலுக்கு செல்லும் பழக்கம் இல்லை. ஆனால் கோயிலில் மூவரும் ஒன்றாக சந்தித்துக்கொண்டுள்ளோம். 6.1.2021க்கு முன்பு மகேஸ்வரியை கடைசியாக எப்போது பார்த்தேன் என்று நியாபகம் இல்லை. மகேஸ்வரியின் கணவர் உடல்நிலை சரியில்லாதது குறித்து மகேஸ்வரியோ, காயத்திரியோ என்னிடம் சொல்லியுள்ளார்களா என்றால் மகேஸ்வரியின் கணவர் உயிருடனே இல்லை என சொன்னதாக நியாபகம் உள்ளது. அந்த விவரத்தை மகேஸ்வரி சொன்னரா, காயத்திரி சொன்னரா என்று நியாபகம் இல்லை. மகேஸ்வரி கடனை திருப்பி தராத விவரத்தை

காயத்திரி என்னிடம் எப்போது சொன்னார் என்றால் இந்த வழக்கு போடும் போது சொன்னார். இந்த வழக்கு போடுவதற்கு முன்பாக என்னிடம் சொன்னாரா என்றால் நியாபகம் இல்லை. மகேஸ்வரியின் கணவர் உடல்நிலை சரியில்லாமல் சென்னையில் இருந்த போது மகேஸ்வரியும் அவருடன் மருத்துவமனையில் இருந்து பார்த்துக்கொண்ட விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. காயத்திரியோ, காயத்திரியின் வழக்கறிஞரோ எவ்வாறு சாட்சியம் சொல்ல வேண்டும் என எனக்கு சொன்னார்களா என்றால் இல்லை. நான் சாட்சி சொல்வது சம்மந்தமாக வழக்கறிஞர் யாரையேனும் பார்த்தேனா என்றால் இல்லை. பொய் சாட்சியம் சொன்னால் குற்ற நடவடிக்கை எடுக்கப்படும் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் நான் உண்மையை சொல்வதால் எனக்கு அது பற்றி கவலை இல்லை. நிருபண வாக்குமூலத்தை காயத்திரியின் வழக்கறிஞர் தான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யும் போது கொடுத்தார். நிருபண வாக்குமூலத்தை கொடுப்பதற்கு முன்பாக வழக்கறிஞரை பார்த்தேனா என்றால் நான் சொல்லச் சொல்ல அவர் நிருபண வாக்குமூலம் தயார் செய்த பிறகு நான் கையெழுத்து போட்டேன். காயத்திரி கடனை கொடுப்பதற்கு முன்பாக அவரிடம் பணம் இருப்பதை நான் பார்த்தேனா என்றால் கொடுக்கும் போது தான் பார்த்தேன் அதற்கு முன்பாக நான் பார்க்கவில்லை. வழக்கு புரோநோட்டில் ஸ்டாம்பின் மீது கண்டுள்ள கையொப்பமும், அதற்கு கீழே உள்ள கையொப்பமும் மாறுபட்டு உள்ளது என்றால் சரியல்ல. வழக்கு புரோ நோட்டு 6.1.2021 அன்று தயார் செய்யப்பட்டது அல்ல என்றால் சரியல்ல. அதில் எழுதப்பட்டிருக்கும் அனைத்து வாசகங்களும் காயத்திரி சொன்னதின் பேரில் வழக்கு தாக்கல் செய்தபோது நான் பூர்த்தி செய்து கொடுத்தது என்றால் சரியல்ல. தாவா புரோ நோட்டில் கண்டபடி காயத்திரி மகேஸ்வரிக்கு ரூ. 50 லட்சம் கடன் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. புரோ நோட்டை நான் பூர்த்தி செய்த பிறகு மகேஸ்வரி அவரது பேனாவில் கையொப்பம் இட்டார். நானும், காயத்திரியும் நெருங்கிய நண்பர்கள் என்பதால் அவர் கேட்டுக் கொண்டபடி இந்த வழக்கிற்கு

ஏற்றார்போல் அவர் சொன்னபடி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. ஆகவே எனது சாட்சியம் செல்லத்தக்கது அல்ல என்றால் சரியல்ல.

/உண்மை நகல்/

ஒப்பம்/- திரு. ப. மதுசூதனன்,
முதன்மை மாவட்ட நீதிபதி,
திருவண்ணாமலை.